[2014 ஆகஸ்ட் 8

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலிருந்து பெங்களூருவுக்கு பேருந்து இயக்கப்படுகின்ற வழித்தடங்கள் இரு மாநிலங்களுக்கு உட்பட்ட வழித்தடங்களாக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று இரு மாநிலங்களுக்குண்டான அந்த வழித்தடங்களுக்குண்டான ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது அது பரிசீலிக்கப்பட்டு அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

380—

ஆவின் பாலகம்

***36137—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையினை அதிகரிக்கும்

2014 ஆகஸ்ட் 8]

நோக்கத்தில் முகவர்கள் நியமனம் செய்ய நாளிதழ்களில் விளம்பரம் செய்து, தகுதி வாய்ந்த முகவர்களிடம் விண்ணப்பம் பெற்று அவர்களைத் தேர்வு செய்து காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க விழுப்புரம் ஆவின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்களின் கவிதை கருணை, கைகளின் கவிதை கொடை, இதயத்தின் கவிதை இரக்கம், இதய தெய்வம் அம்மாவின் கவிதைப் புரட்சி (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! அன்று தஞ்சைத் தரணியில் பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டினான் இராஜராஜசோழன். அது ஆன்மீகக் கோயில். இன்று நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை ஈச்சங்கோட்டையில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தைக் கட்டுகிறார் மாண்புமிகு அம்மா, இது அறிவுக் கோயில். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! ஒரே ஆண்டில், ஒரே மாதத்தில், ஒரே நாளில், ஒரே நேரத்தில் மூன்று வேளாண் கல்லூரிகளைத் தமிழகத்திற்கு வாரி வழங்கி, வேளாண் புரட்சிக்கு வித்திட்ட ஒரே முதல்வர் வேளாண் தாயின் தலைமகள் மாட்சிமைத் தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, தமிழக அனைத்து வேளாண் பட்டதாரிகள் சார்பிலும், பகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் பணிந்து வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க முகவர்கள் முன்வந்தால் அமைத்துத் தரப்படும் என்று பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொகுதி மக்களின் நலன் கருதி காட்டுமன்னார்கோவிலில் மொத்த பால் குளிர்விப்பான் (Bulk milk cooler) ஒன்றினை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலில் செயல்படுகின்ற மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 36, கொள்முதல் நாளொன்றுக்கு 2,010 லிட்டர். உள்ளூர் விற்பனை போக 1,800 லிட்டர் ஒன்றியத்திற்கு வருகிறது. அங்கே பால் உற்பத்தியின் கொள்ளளவு அதிகரிக்கும்போது மொத்த குளிர்விப்பான் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணும் உணவும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் கண்ணனுக்குச் சொந்தம் என்று சொல்வார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் உண்ணும் உணவும், பருகும் நீரும், உட்கொள்ளும் மருந்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குச் சொந்தம் எனச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டே அப்பகுதி மக்களுக்கு* Bulk Milk Cooler *ஒன்றினை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் பால் கொள்முதல் அதிகரிக்கின்றபோது நாங்கள் ஆய்வு செய்து அங்கே மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 381, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*